திரு. எஸ். டி. உகம்சந்த் : ரிப்பேர்கள் செய்யப்பட்டு வருகின்றன என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதனுடைய மதிப்பீடு எவ்வளவு ? எப்போது அந்தப் பணிகள் முடிக்கப்படும் என்கின்ற விவரங்களை அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இன்னும் இரண்டு, மூன்று மாதங்களுக்குள்ளாக அந்தப் பணிகள் முடிக்கப்படும். அதற்கான மதிப்பீடுகள், பொதுப்பணித் துறைக்கு அதற்காகத் தனியாகக் கொடுக்கப்பட்டிருக்கிற தொகையிலேயிருந்து செய்து வருகிறோம்.

5. அறிக்கை அளித்தல்.

மனுக்கள் குழு.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனுக்கள் குழுவின் நான்காவது அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

6. தீர்மானங்கள்

(அ) மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்வு.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு (Senate) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலிருந்து கீழ்க்கண்ட இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் :

1. திரு. அ. லெ. சுப்பிரமணியன்

2. திரு. சா. பீட்டர் அல்போன்ஸ் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS